அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 12/2005(VIII)

எனது இலக்கம் : EST-6/04/INS/1010
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.10.29

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ள நலன்களை தொடர்ந்தும் விரிவுபடுத்தல்**

2016.04.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2005(VI) மற்றும் 2017.10.30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2005(VII) இன் ஏற்பாடுகளின் பால் தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

02. 2017.10.30 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2005(VII) இனால் திருத்தியமைக்கப்பட்ட 2016.04.29 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2005(VI) இன் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, 2016.01.01 ஆந் திகதியின் பின்னர் ஓய்வு பெற்றுச் சென்ற அரச உத்தியோகத்தர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அக்ரஹார காப்புறுதித் திட்ட நலன்களை 2016.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற சகல உத்தியோகத்தர்களும் பெற்றுக்கொள்வதற்கு முடியுமான வகையில் அத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்கு 2020.07.22 ஆந் திகதி மற்றும் 2021.08.30 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டங்களின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதற்கமைய, 70 வயதுக்குக் குறைந்த ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா.400/- உம், 70 வயதுக்கு மேற்பட்ட ஓய்வூதியதாரர்களிடமிருந்து மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா.600/- என்ற வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த அக்ரஹார காப்புறுதித் திட்டம் இணைப்பு 01 இன் நிபந்தனைகள் மற்றும் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள நலன்களுக்கும் ஏற்புடையதாகும்.

04. இந்தக் காப்புறுதித் திட்டத்திற்கு பங்களிக்க விருப்பம் தெரிவிக்காத 2016.01.01 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், தமது விருப்பமின்மையை இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும். இக்காலப் பகுதிக்குள் இது தொடர்பாக பதில் அளிக்காத ஓய்வூதியதாரர்கள், இந்த அக்ரஹார திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தவர்களாக கருதப்படுவதுடன், பின்னர் அந்த விருப்பத்தை விலக்கிக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டாது.

05. நிதி அமைச்சு மற்றும் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் இணக்கப்பாட்டுடன் குறித்த திட்டம் தொடர்பான நிர்வாக ஏற்பாடுகளை உள்ளடக்கிய அறிவுறுத்தல் சுற்றறிக்கை ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும்.

06. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2021.11.01 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு

**இணைப்பு 01**

**திருத்தியமைக்கப்பட்ட அக்ரஹார பராமரிப்பு ஓய்வூதியக் காப்புறுதித் திட்டத்திற்கு உரித்தான நிபந்தனைகளும் நியதிகளும் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.**

1. அரச மற்றும் மாகாண அரச சேவைக்குரிய சகல ஓய்வூதியம் பெறுநர்களுக்கும் இக்காப்புதிறுத் திட்டம் உரித்துடயதாகும்.

2. திருத்தியமைக்கப்பட்ட இக்காப்புறுதித் திட்டத்தின் மூலம் 70 வயதுக்குக் குறைந்த ஓய்வூதியம் பெறுநர்களுக்கு மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா.400/-ம், 70 வயதுக்கு மேற்பட்ட ஓய்வூதியம் பெறுநர்களுக்கு மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா.600/- என்ற வகையில் நடைமுறைப்படுத்தல்.

3. ஓய்வூதியம் பெறுநர்களின் ஆயுட்காலம் பூராகவும் இக்காப்புறுதி நலன்கள் உரித்தாகும்.

4. ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்புத் தொகை ஓய்வூதியத் திணைக்களத்தினால் அறவிடப்பட்டு மாதாந்தம் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கு வழங்கப்படும்.

5. ஓய்வூதியம் பெறுநர்களுக்கு மாத்திரம் இக்காப்புறுதி திட்டத்தின் கீழ் நன்மைகள் கிடைக்கப்பெறும் என்பதோடு, அவர்களின் வாழ்க்கைத் துணைக்கு, அநாதைகளுக்கு அல்லது அங்கவீன பிள்ளைகளுக்கு நலன்கள் உரித்தாவதில்லை.

6. ஓய்வூதியம் பெறுநரின் வாழ்க்கைத் துணை, தற்போது அரச சேவையில் ஈடுபடுபவராயின் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் போது ஓய்வூதியம் பெறுநருக்கு மாத்திரம் இக்காப்புறுதித் திட்டத்தின் கீழ் உரிமை கோருதல் ஏற்புடையாகும்.

7. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஓய்வூதியம் பெறுநர்களுக்கான விண்ணப்பப்படிவம் இக்காப்புறுதி முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறுநர்களினால் தமது நலன்களைப் பெறுவதற்கு பயன்படுத்த முடியும் என்பதோடு, அங்கத்தவர்களால் நலன் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம் உண்மையானதும் சரியானதுமென பிரிவின் கிராம உத்தியோகத்தரின் மூலம் சான்றுப்படுத்தப்பட்டு, மருத்துவமனையிலிருந்து வெளியேறிய தினம் முதல் 90 நாட்களினுள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கு அனுப்புதல் வேண்டும்.

**(அ) தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெறும் போது**

(i) நோய் நிருணய அட்டையின் சான்றுப்படுத்திய பிரதி.

(ii) மருத்துவமனையினால் வழங்கப்பட்ட இறுதி விலைப்பட்டியலின் மூலப் பிரதிகள்.

(iii) பணம் செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டுக்களின் மூலப் பிரதிகள்.

**(ஆ) அரச மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெறும் போது**

(i) நோய் நிருணய அட்டையின் சான்றுப்படுத்திய பிரதி.

(ii) மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காலத்தில் வைத்தியரின் பரிந்துரையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் மருந்துச் செலவுகளுக்கு உரித்தான மருந்து விளக்க விவரப் பட்டியல் (Prescription) மற்றும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதிகள்.

8. ஒரு தனியார் மருத்துவமனையால் செய்யப்படும் இதயம், மூளை, சிறுநீரகம் மற்றும் கல்லீரல் அறுவை சிகிச்சைகளுக்கு பிணை உத்தரவாதக் கடிதம் பெறப்பட்டால், பின்வரும் ஆவணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(i) பயனாளியிடமிருந்து பிணை உத்தரவாதக் கடிதத்தைப் பெறுவதற்காக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியிலிருந்து கோரிக்கைக் கடிதம்.

(ii) பிரிவின் கிராம உத்தியோகத்தரின் மூலம் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்.

(iii) சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரியால் சான்றளிக்கப்பட்டு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் மற்றும் தனியார் மருத்துவமனை வழங்கிய மதிப்பீட்டுக் கடிதம்.

(iv) கிராம உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்பட்ட ஓய்வூதிய அடையாள அட்டையின் பிரதி.

(v) கிராம உத்தியோகத்தரினால் சான்றுப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதி.

(vi) உரித்துடைய பணத்தை நேரடியாக மருத்துவமனைக்கு செலுத்த பயனாளியின் உடன்பாட்டினை தெரிவிக்கும் கடிதம்.

**2021.11.01 ஆந் திகதிக்கு திருத்தியமைக்கப்பட்ட அக்ரஹார பராமரிப்பு ஓய்வூதியக் காப்புறுதித் திட்டத்தின் பயனாளிக் குறிப்பு**

**(அ) ஆயுட் காலத்தினுள் சாதாரணமாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய நலன்கள்**

| தொடர் இலக்கம் | நலன் வகைகள் மற்றும் பெறுமதி (ரூபாவில்) | அதி கூடிய பெறுமதி |
|---|---|---|
| 01 | **தனியார் மருத்துவமனையொன்றில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் போது**<br>• அறைக் கட்டணமாக (தினமொன்றிற்கு ரூபா.3,000/- என்ற வீதம் அதிகபட்சம் 10 நாட்களுக்கு) ரூபா.30,000/-<br>• மருந்துகள், அறுவைச் சிகிச்சை மற்றும் தாதியர் செலவுகள் ரூபா.50,000/-<br>• மருத்துவக் கட்டணம் ரூபா.20,000/-<br>• மருத்துவப் பரிசோதனைகளுக்கு ரூபா.20,000/- | 120,000/-<br>(ஒரு நிகழ்வுக்கு) |
| 02 | **தனியார் ஆயுர்வேத மருத்துவமனையில் சிகிச்சை பெறும் போது**<br>• அறைக் கட்டணமாக (தினமொன்றிற்கு ரூபா.1,000/- என்றவீதம் அதிகபட்சம் 10 நாட்களுக்கு) ரூபா.10,000/-<br>• மருந்துகள், அறுவைச் சிகிச்சை மற்றும் தாதியர் செலவுகள் ரூபா.35,000/-<br>• மருத்துவக் கட்டணம் ரூபா.15,000/-<br>• மருத்துவப் பரிசோதனைகளுக்கு ரூபா.15,000/-<br>(தனியார் ஆயுர்வேத மருத்துவமனை சுதேச மருத்துவத்திற்கு பொறுப்பான அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தனியார் ஆயுர்வேத நிறுவனங்களிலிருந்து எடுக்கப்பட்ட சிகிச்சைகளுக்கு செலுத்தப்படுவதில்லை.) | 75,000/-<br>(வருடாந்தத்திற்கு உட்பட்டது) |
| 03 | **(அ) அரசாங்க மருத்துவமனைகளுக்கு**<br>அரசாங்க மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறப்படுமாயின் (ஒரு தடவைக்கு அதிகபட்சம் 10 நாட்களுக்காக தினமொன்றிற்கு ரூபா.500/- என்ற விகிதத்தில் வருடமொன்றிற்கு அதிகபட்சம் 20 நாட்களுக்கு மாத்திரம்)<br>• மருந்துச் செலவுகள்<br>• மருத்துவப் பரிசோதனைகளுக்கு<br>(தங்கியிருந்த காலப்பகுதிக்கு உரித்தாக மாத்திரம் விலைப் பட்டியல் மீள்நிரப்பப்படும் என்பதோடு, அதற்காக மருத்துவ பரிந்துரைகள் மற்றும் விலைப் பட்டியலின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.) | 5,000/-<br>50,000/-<br>20,000/- |

| | | |
|---|---|---|
| | **(ஆ) அரசாங்க மருத்துவமனை (கட்டணம் செலுத்தும் வாட்டுக்களுக்கு)**<br>• அறைக் கட்டணம் ரூபா.10,000/-<br>(தினமொன்றிற்கு ரூபா.1,000/- என்றவீதம் அதிகபட்சம் 10 நாட்களுக்கு)<br>• மருந்துகள், அறுவைச் சிகிச்சை மற்றும் தாதியர் செலவுகள் ரூபா.35,000/-<br>• மருத்துவக் கட்டணம் ரூபா.15,000/-<br>• மருத்துவப் பரிசோதனைகளுக்கு ரூபா.15,000/- | 75,000/-<br>( ஒரு நிகழ்வுக்கு) |
| 04 | **அரசாங்க ஆயுர்வேத மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்காக**<br>அரசாங்க ஆயுர்வேத மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறப்படுமாயின் (ஒரு நாளுக்கு ரூபா.500/- என்ற விகிதத்தில் அதிகபட்சம் 10 நாட்களுக்கு )<br>(வருடமொன்றிற்கு அதிகபட்சம் 20 நாட்களுக்கு மாத்திரம்) | 5,000/- |
| 05 | கண்புரை அறுவை சிகிச்சை (லென்ஸ் செலவுகள் உட்பட) | 25,000/- |

குறிப்பு: மேலே 01 தொடக்கம் 05 வரையான நிகழ்வுகளுக்கான உச்ச எல்லைகளுக்கு அமைய காப்புறுதி உறுப்பினரின் உரிமைகோரல் எல்லை ஆண்டுக்கு அதிகபட்சம் ரூபா.150,000/- ஆகும்.

**<u>(ஆ) ஆயுள் காலத்தில் ஒரு முறை மாத்திரம் மீள்நிரப்பக்கூடிய விசேட நலன்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.</u>**

| **தொடர் இலக்கம்** | **நலன் வகைகள்** | உச்சப் பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 01 | • Critical Heart Surgeries (including by-pass and angioplasty)<br>இதயத்துடன் தொடர்பான பிற சத்திர சிகிச்சைகளுக்கு<br>• Implanting pacemaker - Single<br>• Implanting pacemaker - Double<br>• RF Ablation | 500,000/-<br>150,000/-<br>300,000/-<br>225,000/- |
| 02 | சிறுநீரக மாற்று சிகிச்சைக்கு | 500,000/- |
| 03 | மூளை அறுவைச் சிகிச்சைக்கு | 500,000/- |
| 04 | கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சைக்கு | 500,000/- |
| | ஒரு தனியார் மருத்துவமனையில் செய்யப்படும் இதயம், சிறுநீரகம், மூளை மற்றும் கல்லீரல் அறுவை சிகிச்சைகளுக்கான செலவுகளை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தால் நேரடியாக மருத்துவமனைக்கு செலுத்த முடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில் மருத்துவமனைக்குச் செல்வதற்கு முன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியிலிருந்து பிணை உத்தரவாதக் கடிதம் பெறப்படல் வேண்டும்.<br>மேற்படி அறுவைச் சிகிச்சைகள் தவிர்ந்த ஒரு தனியார் மருத்துவமனையில் மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சைகளுக்கான செலவுகளை செலுத்துவதில் நலன் காப்புறுதித் திட்ட இலக்கம் 01 இற்கு ஏற்ப மீள்நிரப்பப்படும். | |
| 05 | புற்று நோய்க்காக | 200,000/- |
| 06 | செவிப்புலன் கருவிகளுக்கு (ஆயுட்காலத்திற்கும் ஒரு தடவை மாத்திரம்) | 50,000/- |